Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 143/2022 PW-4**

Name : முகமதுமீரான்
Father / Husband name : அப்துல்ரகுமான்
Village : திண்டிவனம்
Age : 39
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 15.12.2025

A1, A3 present. A2 absent. Petition u/s 317 CrPC filed and allowed. APP present.

E summon served.

**முதல் விசாரணை**

நான் மெடிக்கலில் வேலை செய்துவருகிறேன். சாட்சி செந்தில்குமார் என்பவரை எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஆவணமான பார்வை மகசரில் உள்ள 1 வது கையொப்பம் என்னுடையது தான். கடந்த 2021 ம் வருடம் 12 வது மாதம் தேதி நினைவில்லை காலை சுமார் 7, 8 மணியளவில் நான் திண்டிவனம் மேம்பாலம் இறங்கும் இடத்தில் நேரு வீதி அருகே பஜாருக்கு சென்றபோது திண்டிவனம் காவல் நிலைய போலிசார் என்னை அழைத்து கையொப்பம் பெற்றர்கள். எதற்காக என்னிடம் கையொப்பம் வாங்கினார் என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை. **பார்வை மகசரில் உள்ள சாட்சியின் கையொப்பம் மட்டும் அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**( அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து கு.வி செய்ய அனுமதி கேட்டதின் பெயரில் கு.வி செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது )**

இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் விசாரித்தார்கள் என்றும்

விசாரணையின்போது 06.12.2021 ந்தேதி காலை சுமார் 7 மணியளவில் நீங்களும் உங்கள் ஊரை சேர்ந்த செந்தில்குமார் என்பவரும் திண்டிவனம் மேம்பாலம் இறக்கத்தில் நின்றிருந்தபோது திண்டிவனம் காவல் நிலைய உதவி ஆய்வாளர் அங்கு வந்து இந்த வழக்கில் சம்பவயிடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயாரர் செய்தார்கள் என்றும் அந்த பார்வை மகசரில் நீங்களும் செந்தில்குமார் சாட்சியாக கையொப்பம் செய்தோம் என்றும் போலிசார் விசாரணையின் உண்மையை சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் கேட்டுக்கொண்டதால் அரசு தரப்பு சாட்சியத்திலிருந்து விலகி எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

**Sd/ M.Elavarasi,**
**Judicial Magistrate No.I, Tindivanam**